மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் என்பது மிக முக்கியமானது. அந்த நேரத்தில்தான் பல விஷயங்களை உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள முடியும். எந்தெந்த இலாகா சம்பந்தப்பட்ட கேள்வி வருகிறதோ, அந்தந்த இலாகா சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்களுடைய இருக்கைகளில் உட்கார்ந்திருக்க வேண்டும். அப்போதுதான் உறுப்பினர்கள் என்ன கேள்வி கேட்கிறார்கள், என்ன விஷயம் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால், அந்த இருக்கைகள் காலியாகவே இருக்கின்றன. அது அழகல்ல, இது முறையும் அல்ல.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அதற்கான அறிவுரையை வழங்குகிறேன்.*

திரு. துரைமுருகன்: *இதை நான் இரண்டாவது முறையாக தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு நான் உரிய அறிவுரையை வழங்குகிறேன்.*

வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

146—

கூட்டுறவு நூற்பாலை

***2071—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி, நாசரேத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2017 ஜூலை 6]

(அ) மற்றும் (ஆ) திருச்செந்தூர் தொகுதி, நாசரேத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார். தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி, நாசரேத்தில் செயலிழந்து, பின்னர் கலைக்கப்பட்ட திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் திறந்து செயல்படுத்துவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

முற்பகல் 10–45

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாசரேத் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள மக்களுக்கு வாழ்வாதாரமாக அமைந்து, வேலைவாய்ப்பையும் வழங்கவேண்டுமென்ற நோக்கத்தில்தான், அப்பகுதியிலுள்ள மக்களால் இலவசமாகவே இடங்கள் வழங்கப்பட்டு, முன்னாள் முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 1962 ஆம் ஆண்டு திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை தொடங்கப்பட்டது. முதலில், 12,500 கதிர்கள் இயந்திரத்திறன் கொண்டு உற்பத்தி தொடங்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டு முதல் 25,000 கதிர்கள் இயந்திரத்திறன் அளவுக்கு விஸ்தரிக்கப்பட்டது. முறுக்கு நூல்களும் உற்பத்தி செய்யப்பட்டு, இலாபகரமாகச் செயல்பட்டு வந்தது. தொழிலாளர்களுக்கு 33 சதவிகிதம் போனஸ் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. கடைசியாக 1988–1991 வரை மாதம் ஒன்றுக்கு சராசரியாக 30 இலட்சம் ரூபாய் வரை இலாபம் ஈட்டி வந்தது. நிருவாகத்தின் முறைகேடுகளால் இலாபத்தில் இயங்கிவந்த ஆலை நஷ்டம் அடையத் தொடங்கியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மணி என்னவென்று பாருங்கள். இதுவரையில் 5 வினாக்கள் மட்டுமே எடுத்து முடிக்கப்பட்டுள்ளன. கேள்வியை விரைந்து கேளுங்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: இந்த நிலையில் தொழிலாளர்களுக்கு நெருக்கடி கொடுத்து, தன்விருப்ப ஓய்வில் செல்லுமாறு அவர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். 2003 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் தேதியுடன் உற்பத்தியை நிறுத்திவிட்டார்கள். அதனால் அங்கு பணிபுரிந்த தொழிலாளர்கள், அவர்களுடைய குடும்பங்கள் மற்றும் நாசரேத் பகுதிகளைச் சுற்றியுள்ள வியாபாரிகள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து மறுபரிசீலனை செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு நூற்பாலையில் சொத்து மதிப்பைவிட குவிந்த நஷ்டம் அதிகமாகி விட்டது. கடன் தொகை மிகுந்து விட்டது. எனவே, முதன்மைச் செயலாளர் அவர்களுடைய தலைமையில் சம்பந்தப்பட்ட அரசுத் துறைச் செயலாளர்கள் அனைவரும் கலந்துபேசி முடிவு செய்து, நூற்பாலை கலைக்கப்பட்டு விட்டது. ஆலை செயலிழந்தபோது பணியாற்றிய 598 தொழிலாளர்களில் 568 தொழிலாளர்கள் தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் ஓய்வு பெற்று விட்டனர். ஓய்வு பெற்றவர்களுக்கு 5.94 கோடி அளவில் பணப்பயன்கள் வழங்கப்பட்டு விட்டன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல இந்த நேரத்தில், இந்தக் காலத்தில், இந்தச் சூழ்நிலையில் எந்த ஒரு தொழிலாளரையும் கட்டாயப்படுத்தி பணியிலிருந்து ஓய்வு பெற வைக்க முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 30 தொழிலாளர்கள் தன் விருப்ப ஓய்வில் செல்லாமல் தொழிற்சங்கங்கள் மூலமாக திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத்தில் கூடுதலாக பணப்பயன்கள் கேட்டு வழக்குத் தொடுத்தனர். வழக்கு நிலுவையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கு முடிவுக்கு வரும்போது அவர்களுக்கும் பணப்பயன்கள் வழங்க தாராளமாக நிதி இருக்கிறது என்பதையும் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி தாராளமாக இருப்பதாக இங்கே சுட்டிக்காட்டியுள்ளார்கள். அந்த வகையிலே, நூற்பாலையினுடைய 22 ஏக்கர், அதிலுள்ள கட்டடங்கள், ஏற்கெனவே பயன்படுத்தி வந்த இயந்திரங்கள் அனைத்தும் இதுவரையில் பூட்டிவைத்தாற்போல் அப்படியே இருக்கின்றன. அந்தப் பகுதியில் தவிக்கின்ற மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துகின்ற வகையிலும், அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்ற வகையிலும் புதிய தொழில்நுட்பத்துடன் அந்த நூற்பாலையை மீண்டும் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட அந்த நூற்பாலையை உடனடியாக மீண்டும் தொடங்கவேண்டுமென்று அந்தப் பகுதி மக்களும் விரும்புகிறார்கள். அதற்கான பணிகளை மேற்கொள்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நூற்பாலை மூடப்பட்டபிறகு அதிலிருக்கக்கூடிய இந்த* scrap*–ஐ எல்லாம் ஏலம் விடமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. காரணம்* E.P.F. Attachment *இருக்கின்றது. உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து, 30 தொழிலாளர்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். வழக்கு 27–7–2017 அன்று வழக்கு மன்றத்தில் வரவிருக்கிறது. அதற்குப்பிறகு, அவர்களுக்கும் பணப்பயன்கள் வழங்கப்பட்டு, மூடியிருக்கிற ஆலைகளில் இருக்கக்கூடிய* scrap *எல்லாம் எடுக்கப்பட்டு, ஏலம் விடுவதற்கான பணிகளும் முடிவடையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ரொம்ப நன்றி.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: Hi–tech park *ஆரம்பிப்பதற்கு அரசு உதவி செய்கின்றது. தனியார் ஆரம்பிக்கிறார்கள். அதை அவர்கள் எப்படி ஆரம்பிக்கிறார்கள்? அதை எப்போது ஆரம்பிக்கிறார்கள்? அதை அரசு நிருவாகம் செய்கிறதா, இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். இரண்டாவது* Hi–tech park *ஆரம்பித்து, அதனை எத்தனை வருடங்களுக்குள் இயங்கச் செய்ய வேண்டும். முடியவில்லை என்று சொன்னால் அவர்கள் மாற்றுத் தொழில் செய்வதற்கான வாய்ப்பு இருக்கின்றதா? ஏன் இதைக் கேட்கிறேன் என்றால், ஆண்டிப்பட்டியில் ஒரு* Hi–tech park *ஆரம்பித்தோம். இதுவரைக்கும் அது இயக்கத்திற்கு வரவில்லை. அது மூடப்பட்டுவிட்டது என்றால், மீண்டும் அதனை உயிர்ப்பிக்க வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டியில் பூங்கா துவங்குவதற்கான ஆயத்தப் பணிகள் அனைத்தும் முடிந்துவிட்டன. மத்திய அரசு 40 சதவிகிதம் பங்குத் தொகையை வழங்கிவிட்டது. மாநில அரசு 9 சதவிகிதம் பங்குத் தொகையை வழங்கிவிட்டது. பணிகள் எல்லாம் துவங்கப்பட்டுவிட்டன. ஆனால், தொழில்முனைவோர்கள் அவர்களுக்குள் ஏற்பட்டுள்ள சர்ச்சையின் காரணமாக, பிணக்கின் காரணமாக, இந்தப் பணியை கிடப்பிலே போட்டுவிட்டார்கள். வங்கிக் கடன் பெறுவதிலே அவர்கள் நாட்டம் செலுத்தவில்லை. எனவே, இந்தப் பூங்கா நீண்டகாலமாக இயங்காமல் இருந்த காரணத்தினாலும், பணிகளில் முன்னேற்றம் இல்லாத காரணத்தினாலும் அது மூடப்பட்டு, மைய அரசும், மாநில அரசும் அவரவர்களுடைய பங்குத் தொகையை கையகப்படுத்திக்கொண்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2017 ஜூலை 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை மட்டுமல்ல, எங்களுடைய பகுதியில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆலையிலும் இதுபோல்தான் இருக்கின்றது. நான் அமைச்சராக இருந்தபோது இந்த ஆலைகளையெல்லாம் பார்வையிட்டிருக்கிறேன். உள்ளே இருக்கின்ற பொருட்கள் அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாகக் களவு போய்க்கொண்டே இருக்கின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் அவற்றையெல்லாம் வேகமாக* dispose *செய்துவிட்டு, இப்போது இருக்கின்ற நூற்பாலையின் இயந்திரத்திறன் 10,000 கதிர்கள் இருந்தாலும், அவ்வளவு கதிர்கள் வேண்டியதில்லை என்பதால், அவற்றை 6,000 கதிர்களாகக் குறைத்துவிட்டு, புதிதாக* modernise *செய்து, மெஷின் போட்டால்தான் கட்டுபடியாகுமே தவிர, பழைய மெஷினை வைத்து ஓட்டினால் கட்டுப்படி ஆகாது. ஆகவே, இயந்திரத்திறன் 15,000, 20,000 கதிர்கள் என்றிருக்க வேண்டியதில்லை. இயந்திரத்திறன் 15,000 கதிர்கள் இருக்கும் இடத்தில் 7000, 8000 கதிர்கள் இருந்தால்கூட, உற்பத்தித்திறன் நமக்குக் கிடைத்துவிடுகிறது. ஆகவே,* modernise *செய்து புதிய ஆலைகளை உண்டாக்கக்கூடிய அந்தப் பணிகளைச் செய்ய வேண்டும். இன்னொன்று, கடனை விட சொத்தின் மதிப்பு கூடத்தான் இருக்கின்றது. ஆகவே, அவற்றை விற்றுவிட்டு அந்தப் பகுதியில் ஆலைகளை ஆரம்பித்தோம் என்று சொன்னால் வருடம் முழுவதும் நமது நெசவாளர்களுக்கு தரமான நூலை நம்முடைய நூற்பாலைமூலம் கொடுக்கமுடியும். ஆகவே, அதற்குரிய முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் இயங்குகின்ற நூற்பாலைகளில் 61 சதவிகித நூற்பாலைகள் தமிழ்நாட்டில்தான் இயங்குகின்றன. ஆனால், இதில் என்னவொரு மிகப் பெரிய குறைபாடு என்று சொன்னால், தமிழ்நாட்டில் பருத்தியின் உற்பத்தி 5 சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளது. தமிழ்நாடு தனது 95 சதவிகித பருத்தி தேவைக்கு வெளி மாநிலங்களை நம்பி தொழில்*

நடத்தக்கூடிய ஒரு நிர்ப்பந்தம் இருக்கின்றது. பருத்தியினுடைய விலை 100 சதவிகிதம் உயர்ந்துவிட்டது. எனவே, இந்தத் தொழிலை நடத்துவது என்பது கடினமான ஒன்றாக இருக்கின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிப்போம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வேளாண்மையை நம்பியிருக்கின்ற விவசாயிகளை உள்ளடக்கியிருக்கின்ற பகுதியாகும். இப்பகுதி விவசாயிகளால் பருத்தி அதிகமாக விளைவிக்கப்பட்டு, மாடப்பள்ளி உழவர்கள் கூட்டுறவு சேவை சங்கத்தின்மூலம் செயல்படும் விற்பனை மையத்தில் மிகப் பெரிய அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. தொழிற்சாலைகளே இல்லாத எனது தொகுதியில் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிட, மாடப்பள்ளி உழவர்கள் கூட்டுறவு சேவை சங்கத்திற்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலத்தில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவே இந்த நூற்பாலையை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*